# தேசிய மீலாத் போட்டி - 2021
## அதான் போட்டி

தேசிய மீலாத் விழா – 2021 இனை முன்னிட்டு நடாத்தப்படும் மீலாத் போட்டிகளில் அதான் போட்டியும் சேர்த்துக் கொள்ளப்பட்டுள்ளது. பள்ளிவாசல்களில் முஅத்தின்களாக கடமை புரிவோரில் சிறந்த குரல் வளமுள்ளோரை அடையாளம் காண்பதற்கும் இனிய குரலில் அதான் சொல்வதனை ஊக்குவிப்பதற்கும் இப்போட்டி சிறந்ததொரு வாய்ப்பாக அமையும்.

**01. போட்டியில் பங்குபற்றும் முறை:**

நாட்டில் கொவிட்-19 அசாதாரண சூழ்நிலை நிலவுவதன் காரணமாக நிகழ்நிலை (online) ஊடாக மாத்திரமே போட்டிகள் நடைபெறும். போட்டியில் பங்குபற்ற விரும்பும் போட்டியாளர்கள் அதான் சொல்வதனை தெளிவான காணொளியாக (Video) பதிவு செய்து விண்ணப்பப் படிவத்துடன் இணைத்து https://forms.gle/gE2JtxxYUEPX1U8X9 எனும் நிகழ்நிலை படிவத்தில் (Online form) பதிவேற்றுவதன் மூலம் போட்டியில் பங்குபற்ற முடியும்.

**விண்ணப்ப முடிவுத் திகதி: 2021.09.20**

**02. போட்டி நிபந்தனைகள்:**

1. ஆண்கள் மாத்திரமே போட்டியில் பங்குபற்ற முடியும்.
2. 18 வயதுக்கு மேற்பட்டோராக இருத்தல் வேண்டும்.
3. பள்ளிவாசல்களில் கடமை புரியும் முஅத்தின்களாக இருத்தல் அவசியம்.
4. ஒருவர் ஒரு விண்ணப்பத்தினை மாத்திரமே அனுப்ப முடியும்.
5. விண்ணப்பமானது கடமை புரியும் பள்ளிவாசலின் தலைவர் மற்றும் செயலாளர் ஆகியோரினால் அல்லது மாவட்டத்திற்குப் பொறுப்பான எமது திணைக்கள உத்தியோகத்தர் ஒருவரினால் விண்ணப்பதாரியின் புகைப்படத்துடன் (2” X 2”) அத்தாட்சிப் படுத்தப் பட்டிருதல் வேண்டும்.
6. அதான் சொல்லும் காணொளியானது எடிட்டிங்க (Video Editing) செய்யப்பட்டிருத்தல் கூடாது.
7. விண்ணப்பம் மற்றும் காணொளி என்பன பின்வரும் நிகழ்நிலை (online) முகவரியில் மாத்திரம் பதிவேற்றப்படல் வேண்டும்.
   https://forms.gle/gE2JtxxYUEPX1U8X9

**03. வெற்றியாளர்கள் தெரிவு செய்யப்படும் முறையும் பரிசில்களும்:**

1. இலங்கையின் தலைசிறந்த நடுவர் குழாமின் மூலமாக காணொளிகள் பரீட்சிக்கப்பட்டு வெற்றியாளர்கள் தீர்மானிக்கப்படுவர்.
2. சிறந்த முறையில் அதான் சொல்லும் 10 போட்டியாளர்கள் தெரிவு செய்யப்படுவார்கள்.
3. முதலாம், இரண்டாம், மூன்றாம் இடங்களைப் பெறுவோருக்கு பெறுமதிமிக்க பரிசில்களும், 4 தொடக்கம் 10 வரையான இடங்களைப் பெறுவோருக்கு ஆறுதல் பரிசில்களும் வழங்கப்படும்.
4. ஆள்மாறாட்டம், குரல் மாறாட்டம் போன்ற முறைகேடான விடயங்கள் நிரூபிக்கப்படும் பட்சத்தில் வழங்கப்பட்ட பரிசு மீளப் பெற்றுக் கொள்ளப்படும் என்பதையும் போட்டியாளர் கவனத்தில் கொள்ளவும்.

மேலதிக தகவல்களை எமது திணைக்களத்தின் மாவட்ட / பிரதேச அபிவிருத்தி உத்தியோகத்தர்களிடம் பெற்றுக் கொள்ள முடியும்.

**எம்.எல்.எம். அன்வர் அலி**
**பணிப்பாளர் (பதில்)**
முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் திணைக்களம்